* **477 வினா திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலவர், வித்வான் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களில் எத்தனை பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் (Scholarships) உதவித் தொகை அரிசன நல இலாகாவால் அளிக்கப்படுகிறது ?

(இ) மொத்தம் எவ்வளவு தொகை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) தகுதியுள்ள சாதியினர் (குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் உட்பட) 10

பின்தங்கிய வகுப்பினர் 15

(இ) தங்கிப் பயிலா உதவித் தொகை—

தகுதியுள்ள சாதியினர், பின்தங்கிய வகுப்பினர் .. ரூ 25

தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உண்டு றைச் செலவுகள்—

	சென்னை.	வெளியூர்.
	ரூ.	ரூ.
தகுதியுள்ள சாதியினர் (ஒரு மாதத்திற்கு)	60	50
பின்தங்கிய வகுப்பினர் (ஒரு மாதத்திற்கு)	40	35

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரத்திலிருந்து ஏறக் குறைய 50 பேருக்குத்தான் அந்த உதவித் தொகை கொடுப்பதாகத் தெரிகிறது. மொத்தம் எத்தனை பேர் புலவர், வித்வான் பயிற்சிக்குப் படித்துக்கொண்டிருக்கிறார்கள் ? தமிழ் வளர்ச்சியிலே அக்கறை கொண் டிருக்கிற அரசு இந்தத் தமிழ்ப் பட்டப் படிப்புப் படிக்கின்றவர்களை ஊக்கு விக்க அதிக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த உபகாரச் சம்பளம் குறிப்பிட்ட கணக்குக்கு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை பேருக்குத் தான் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதை வேண்டுமானால் அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசீலிக்கும்.

அரிசனங்களுக்கு வீட்டு மனை

* **478 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமனியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1966–67-ல் சிதம்பரம் தாலுக்காவிலிருந்து அரிசனங்களுக் காக மனை கொடுப்பதில், ஆட்சேபித்து ஐகோர்ட்டில் கொடுத்திருக்கும் ரிட் மனுக்கள் எத்தனை ?

(இ) அதன் முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) சிதம்பரம் தாலுக்காவில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்துவதை எதிர்த்து 1966–67-ஆம் ஆண்டில் 3 ரிட் மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

(இ) அம் மனுக்களில் ஒன்றில் அதாவது ரிட் மனு 266/1966 நிலச் சொந்தக்காரரின் கோரிக்கையை ஏற்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. மற்ற இரண்டு ரிட் மனுக்கள் இன்னும் உயர்நீதி மன்றத்தில் முடிவுறாமல் உள்ளன.